1996 ஜூலை 17] [கலைஞர் மு. கருணாநிதி]

112. **பத்தாம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக அனைத்துப் பாடப்புத்தகங்கள் வழங்கும் புதிய திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ. 4.5 இலட்சம் செலவில் நடப்பு நிதி ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்படும்.** *(மேசையைத் தட்டும் ஒலி)*

கைத்தறி நெசவாளர் நலன்

113. இந்த அரசு இதற்கு முன் ஆட்சியில் இருந்தபோது, கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இருப்பினும், மிக அண்மைக் காலத்தில், இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் எண்ணற்ற ஊழல்கள் நடைபெற்றன. **இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு நலன் பயக்கும் வகையில் செயல்படுத்தப்பட உறுதி கொண்டு, இதற்கென நடப்பாண்டில் ரூ. 6.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

114. 1989-91-ஆம் ஆண்டுகளில் இலாபத்தில் இயங்கி வந்த கூட்டுறவு நூற்பாலைகள், கடந்த ஐந்தாண்டுகளில் பெரும் நட்டத்தில் இயங்கத் தொடங்கின. நிர்வாகச் சீர்கேடுகள் பல ஏற்பட்டதன் விளைவாக, 18 நூற்பாலைகளின் ஒட்டுமொத்த நட்டம் 1995-96-ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 181.43 கோடியளவிற்கு அதிகரித்துவிட்டது. இந்த ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் தனது தேர்தல் அறிக்கையில், தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறப்பதற்கும், நலிவடைந்த பஞ்சாலைகளைச் சீரமைத்துச் செயல்படுத்தித் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வாக்குறுதி அளித்திருந்தது. அதனடிப்படையில் தற்போது மூடிக்கிடக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகளையும் நலிந்த கூட்டுறவு நூற்பாலைகளையும் சீரமைத்துச் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

115. கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 1975-76 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் 58 வயது அடையும் முன்னர் இறக்க நேரிடில்,